# ஞானப்பழம்

— காரை. செ. சுந்தரம்பிள்ளை —

செந்தமிழ் நல்லைத் திருக்கோயில் கொண்டவன்
சிங்கார வேல் முருகன் - நல்ல
ஓங்கார மால் மருகன் - அவன்
தந்தைக் குபதேசம் செய்த குருபரன்
சங்கடம் போக்குபவன் - நலம்
எங்களுக் காக்குபவன்.

ஏறு மயிலேறி எங்கும் வலம்வரும்
ஈசன் இவன் பெரியன் - பக்தர்
நேசன் எமக்குரியன் - நல்லை
ஆறு முகன்அடி யார்க்கமு - தானவன்
ஆதிப் பழமையினன் - ஆனால்
ஓது மிளமையினன்.

தூய மனத்தவர் உள்ளத் துறைந்திடும்
தொல்புகழ் மாமுருகன் - வினை
கொல்கிற வேல்முருகன் - இவன்
நேய முடன்வரு வோரை அணைத்திடும்
நீண்ட கரமுடையோன் - அருள்
பூண்ட முகமுடையோன்.

வேல்கொண்டு வெற்பை உடைத்த பெருமையன்
விண்ணவர் போற்றுபவன் - இந்த
மண்ணவர் ஏத்துபவன் - அன்று
மால்கொண்ட சூரன் மமதை அழித்தோர்
மயிலுரு வாக்கியவன் - கோழி
பயில் கொடி யாக்கியவன்.

ஆறு படைகொண்ட ஞானப் பழம்தமிழ்
ஆகிய கந்தனிவன் - துறை
போகிய மைந்தனிவன் - கையில்
ஊறு படைகொண்ட உன்மத்த ராயினும்
உள்ளம் இரங்குபவன் - அருள்
வெள்ளம் பெருக்குபவன்.

கானக் குறவள்ளி மானை மணந்த
கலியுகக் கந்தனிவன் - அன்பு
கனிந்திடும் சிந்தையினன் - எங்கள்
ஈனப் பிறப்பழித் தீடேற்றம் நல்கிடும்
ஈசன்; அவன்பெருமை - நாவாற்
பேசல் எமக் கருமை.

நல்லூர்த் தேர்விழா மலர்

[illegible] 1970

# அநீதி போக்க அவதாரம் செய்வனோ?

எங்கே தர்மம் அழிக்கப் படுகிறதோ
எங்கே வன்மம் தலைவிரித் தாடுதோ
அங்கே தர்மத்தைக் காப்பதற் காகவும்
அரக்கரைப் பழி தீர்ப்பதற் காகவும்
பொங்கு மாழிசூழ் பூவுல கத்தினில்
புண்ணியத்தை நிலைபெறச் செய்யவும்
எங்கள் கண்ணபிரான் யுகந் தோறுமே
எடுப்பனும் அவதாரங்கள் என்குவர்.

நல்லவர் துயர்கொள்ளும் பொழுதினில்
ஞாலம் துன்பம் அடையும் பொழுதினில்
வல்லவர் பழி ஏற்கும் பொழுதினில்
வாய்மை என்பதொழியும் பொழுதினில்
கள்ளர் காடர் அதிகாரஞ் செய்கையில்
கண்ணிலாதவர் ஆளும் பொழுதினில்
அல்லல் தீர்க்கும் உளத்தின னாகவே
ஆண்டவன் அவதாரம் புரிகுவான்.

உலகில் ஆயிரம் தீமை நடக்குது
உண்மை யென்ப துறங்கிக் கிடக்குது
கலகம் மிஞ்சிக் கொலைகள் நடக்குது
கடைகள் யாவும் எரிக்கப் படுகுது
வலிமை யற்றவர் ஓடும் ரயிலிலும்
வாழும் வீட்டிலும் தாக்கப் படுகிறார்
சலுகை ஓர்சிலர்க் காக விருக்குது
தர்மம் வார்த்தையில் மட்டும் சிரிக்குது.

பாண்டவர்க் காகத் தூது புரிந்தவன்
பங்கைப் பெற்றுப் பகையை முடித்தவன்
கூண்டுடன் துரியோதனன் கூட்டத்தைக்
குவல யத்தி லிருந்து [illegible]த்தவன்
வேண்டும் நன்மைகள் ஆயிரம் செய்பவன்
விந்தை யானவன் பார்த்தனின் சாரதி
ஈண்டு வந்தவ தாரமே செய்வனோ?
இன்னல் தீர்த்தெமை வாழவும் வைப்பனோ?

காரை. செ. சுந்தரம்பிள்ளை

# உனையன்றி யாரெனக்கருளுவார்

— காரை. செ. சுந்தரம்பிள்ளை —

நல்லைமா நகர் நாதனே தமிழ்
நம்பியே வள்ளி நாயகா
செல்வ மாயிரஞ் சேர்த்திடும் கொடிச்
சேவலா மயில் வாகனா
வல்ல சூரனை மாய்த்தனை அவன்
வந்து வீழ்த்திடக் காத்தனை
தொல்லை தீர்த்திடுஞ் சோதியே எமைச்
சோதியா தருள் செய்குவாய்.

ஆணவத்தினால் அன்றயன் செருக்
காகவே யுனைப் போற்றிலன்
நாணமுற்றிடக் குட்டியே சிறை
நன்கு செய்து பின் காத்தனை
வேணி சூடியோன் வேண்டவே அருள்
வேதவுட் பொருள் கூறினை
காணுதற் கரிதானவா எமைக்
காத்தருள் மனம் பூத்தருள்.

கோழி பாடிய வாயினால் அதன்
தஞ்சையும் தமிழ் செய்வனே
வாழும் ஓர் பெரும் பாவலன் என
வம்பு பேசியோன் வெட்கவே
சூழுங் கானகந் தன்னிலே ஒரு
துட்ட வேடனாய்த் தோன்றியே
கோழி முட்டையும் பாட வைத்தவா
கோல நல்லையூர் வேலவா.

குழந்தை யாகியே நாவலின் மிசை
குறும்பு செய்தனை, ஔவையின்
நலந்திகழ் தமிழ் உண்டு நல்வரம்
நல்கியே யருள் செய்தனை
சிலம்பிலே குடிகொண்டு சிற்றிடை
வள்ளியை மணஞ் செய்தனை
அலம்பு மென்தமிழ் கொள்ளுவாய் உனை
யன்றி யாரெனக் கருளுவார்.

ஈழநாடு 15-8-73



# செந்தமிழ்க் கடல்

காரை. செ. சுந்தரம்பிள்ளை

செந்தமிழ் கடலே தமிழ் தெய்வமே
சிந்து பாடிய பைந்தமிழ் வாணனே
சந்தம் மிக்க கவிதை அமுதமே
சங்கம் போற்றி வளர்த்த அறிஞனே
சுந்தரத் தமிழின் வடிவே; கவிச்
சோதியே, குருவே எமை ஆக்கிய
தந்தையே தலையான புலவனே
சாற்றும் கா. கி. நடராஜா வள்ளலே

அந்த நாளிலே மேடையில் ஏறியே
ஐயனே பிரசங்கம் நீ செய்கையில்
செந்தமிழ் கடலின்பிர வாகமோ
தென்றலோ கனல் கக்கும் பீரங்கியோ
மந்த மாருதம் வீசும் மலையமோ
மடை திறந்திடும் ஆற்று நீ ரோட்டமோ
எந்த வாறு புகழ்ந்திடு வோமென
இன்ப முற்றுளம் பொங்கி மகிழுவோம்

கவியரங்கினில் ஏறிக் கவிமழை
கானத் தோடு நீ கொட்டும் பொழுதினில்
புவியரங்கு புகழ்ந்திடு கம்பனோ
புலமை சேர் இளங்கோ திருத்தக்கரோ
பழமை யான புலவர் வழிவந்த
பாரதி அவன் தாசனோ என்றெல்லாம்
தெளிந்திடாது புகழும் படி நிதம்
திக்கெல்லாம் கொடிகட்டிப் பறந்தனை

கற்ற மாணவர் கண்ணீர் உகுத்திட
கன்னிச் செந்தமிழ் மாதா வருந்திடப்
பொற்புடைத் தமிழ்ப் பாவலர் சோர்ந்திட
போற்றி நின்ற அறிஞரும் வாடிட
பெற்ற பிள்ளைகளோடுற வானவர்
பேசரும் கவலை கடல் மூழ்கிட
அற்ப மானிட வாழ்வைத் துறந்தரன்
ஆடும் பாதத்தை ஐயனே சென்றனை

கொள்ளை கொள்ளும் நிமிர்ந்த நடையினை
கொஞ்சமும் பிறர்க் கஞ்சா நெறியினை
வெள்ளை உள்ளத்தை விபூதிப் பூச்சினை
வித்தகர் புகழ்கின்ற மிடுக்கினை
அள்ளும் சொற்பொழி வோடு கவிதைகள்
ஆய்ந்து கூறும் நகைச் சுவைப் பேச்சினை
வள்ளலே இனி யாரிடம் காணுவோம்
வந்து எம் [illegible]ர் தீர்ப்பதெக் காலமோ.

ஈழநாடு 20-05-82



# நண்பரைப் பிரிதல் மிகத் துன்பம்

- காரை. செ. சுந்தரம்பிள்ளை -

தேவன் என்றொரு சிம்மக்குரலோன்
செந்தமிழ் மேடை எங்கும் ஒலித்தோன்
நாவினால் கொடி கட்டிப் பறந்தோன்
நாவல் சிறுகதை நாடகம் தந்தோன்
பாவலர்க்கிணை யாக மொழிவோன்
பட்டி மன்றத் தரணாய் நின்றான்
யாவரும் துயர்கொள்ள மறைந்தான்
யாங்ஙனம் துயர் ஆற்றுவோம் அந்தோ!

மொழிபெயர்ப்புக் கலையினில் வல்லோன்
முகமலர்ந்தினிதாக உரைப்போன்
தெளிவு மிக்க கருத்துகள் சொல்வோன்
சிரிக்க வைக்கும் பிரசங்க மன்னன்
வழி வழி வந்த தமிழ்மொழி மீது
வற்றிடாத நற்பாசம் மிகுந்தோன்
எளிமை யானவனை யாழ் இந்துபோற்றும்
எங்கள் தேவனை யாம் என்று காண்போம்

நாடகங்கள் நடக்கும் அரங்கம்
நாட்டியங்கள் புரியும் அரங்கம்
பாடகர் இசைகூட்டு மரங்கம்
பண்டிதர் வாதம் செய்யு மரங்கம்
பாடசாலை விளையாட்டரங்கம்
பாவலர் கவிசொல்லு மரங்கம்
வாடி நிற்க மறைந்தனன் தேவன்
வாழ்க அன்னவன் நாமம் பல்லாண்டே

ஈழ நாட்டவரோடு பிறரும்
ஏற்றி போற்றிடும் எங்கள் அறிஞன்
தோழன் கயிலாசபதி பிரிந்த துயரம்
துளைத்தெடுக்கையில் வெந்தபுண் மீது
வேலினால் குத்தும் வேதனை தந்த
காலனைப் போற் கயவரே இல்லை,
ஞால மீதில் எதைப் பிரிந்தாலும்
நண்பரைப் பிரிதல் மிகத்துன்பம்

# பெரிய மனிதர்

- காரை. செ. சுந்தரம்பிள்ளை -

ஊரிலே மக்கள் வாழே லாது
உலுத்தர் ஒன்றலவர்
நேரிலே நின்று காரியஞ் செய்யும்
நெஞ்சுரம் இவர்க்கில்லை
பாரிலே இந்தப் பாவியர் ஏதும்
பயனுள் செய்யார்கள்
வாருவர் காலை வஞ்சகஞ் செய்வர்
வாழத் தெரிந்தவர்கள்

நல்லாய் வாழும் ஒருவனைக் கண்டால்
நாசமே யாக்கிடுவர்
இல்லாக் கதையும் பொல்லாக் கதையும்
இட்டுக் கட்டிடுவர்
செல்லாக் காசுச் சிறியர் ஊரைத்
திருந்த விட மாட்டார்
பொல்லாக் கயவர் புன்தொழில் புரியும்
பெட்டைச எழுத்தாளர்.

எந்தக் காரியஞ் செய்திட் டாலும்
இவர்கள் முன்னிற்பர்
சொந்தக் காரியம் போலப் புத்தி
சொல்லித் திரிவார்கள்
அந்தச் சொல்லைக் கேட்கா விட்டால்
'ஆ' 'ஊ' என்பார்கள்
பத்தும் பிடிப்பர் சொந்தம் கொள்வர்
பச்சோந்திக் கூட்டம்

பட்டம் பதவிக் கேங்கித் திரியும்
பண்பே யில்லாதார்
மட்ட மான வழியிற் சென்றும்
மதிப்பைத் தேடிடுவர்
குட்டையில் ஊறிய மட்டைகளாவர்
கொள்கை சிறிது மிலார்
பெட்டைக் கூச்சல் போட்டுத் திரியும்
பெரிய மனித ரிவர்.

# செல்லம்மா

காரை. செ. சுந்தரம்பிள்ளை

காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங்கயிறுய்ச் செல்லம்மா நிற்கின்றாள்
ஓய்ந்த கடையாக
உலர்ந்த சருகாகச்
சாய்ந்த பொழுதாகத்
தலை மேலே கை வைத்துக்
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிறுய்ச் செல்லம்மா நிற்கின்றாள்!

வெங்காயம் நட்டதுவும் விழிபிதுங்கக் காய் கறிகள்
சங்கானைச் சந்தையிலே தலை மேல் சுமந்து விற்றும்
பங்கு வியாபாரம் பார்த்துக் களைத்தும்; அச்
சிங்காரம் தரகனிடம் சிக்கிப் பணத்தோடு
தங்க நகை யாவும், தாரை வார்த்தும்; நெடுநாள்
பட்ட துயரமெல்லாம் பாம்பாகத் தேளாகக்
கொட்டக் குமுறி மனம் கொந்தளிக்கத் துன்பமெலாம்
மேய்ந்து அவளுளத்தை வேதனைகள் செய்திடவே
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிறுய்ச் செல்லம்மா நிற்கின்றாள்.

குழந்தைக்குப் பாலின்றிக் கும்பி எரிகையிலே
தளர்ந்த அவளுக்குச் சற்று மிரங்காமல்
கழன்ற உறவினரைக் காறி உமிழ்ந்தவரைச்
சுழன்று வர வைப்பனெனச் சூளுரைத்து நின்றதுவும்
பெற்ற மகன்வளர்ந்து பெரிதாகிப் பள்ளியிலே
கற்று முடித்துப்பல் கலைக்கழகம் தான் சென்று
முற்றுமவள் உழைப்பை முழுதாகவே யுறிஞ்சிப்
பெற்ற வொரு பட்டத்தால் பெருமையிவள்
[பெற்றதுவும்

கரும்பு நாடி வந்தவொரு கட்டெறும்புக் கூட்டம்
[போல்
விரும்பி யிவள் மகனை விலை கொடுத்து வாங்குதற்குப்
பெரும் பணக்காரரெலாம் பேரமே பேசியதும்,

திருமணமே செய்து வைத்துச் சீதனமே வாங்கியதும்
மருமகளால் சண்டையிட்டு மகன் பிரிந்து
[சென்றதுவும்
சீமைக்குப் போய்ப் பெரிய சீமானாய் வாழ்ந்ததுவும்
ஊமைக் கனவாக உள்ளுக்குள் ளேயறுக்கக்
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிறுய்ச் செல்லம்மா நிற்கின்றாள்.

ஆண்டு பல சென்றும் அவன் வந்து பார்க்கவில்லை
அன்னைக்கரைக் காசும் அவனோ அனுப்பவில்லை
என்மகன் இவன்தான், என்றே பலர் பழித்த
காண்டா மிருகமவன் கயமைக் குணம் படைத்தோன்
மாண்டுவிட்டான் என்ற மரணச் செய்தி (இ) கேட்டு
நெஞ்சம் வெடிக்க நிலை தளர்ந்து யாரெனக்குத்
தஞ்ச மெனக்குமுறித் தலையிலடித்தபடி,
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிறுய்ச் செல்லம்மா நிற்கின்றாள்.

ஈழநாடு வாரமலர் 6.11-83

# மூட்டைப் பூச்சி

எங்களை உறிஞ்சி வாழும்
ரத்தத்தின் ரத்த மான
தங்கமே மூட்டை யாரே
தலையணை மெத்தை பாய்கள்
இங்குள்ள கதிரை மேசை
இருக்கின்ற வாங்கு யாவும்
தங்கியே வாழ்வை யோட்டும்
தம்பியே! சொல்லக் கேளாய்.

முன்பெல்லாம் உன்னைப் பற்றி
முறையாக அறிய வில்லை
பின்புதான் ஆய்ந்து ணர்ந்து
பெரியதோர் உண்மை கண்டேன்
கன்மனம் படைத்தோய் என்றும்
கயவனாய் இருப்பாய் என்றும்
சொன்னவர் பலபேர், ஆனால்
துளியுமே உண்மை இல்லை.

நெல்லுடன் சப்பி சேர்த்து
நிறையவே உழைக்கின் றோரும்
கல்லினை அரிசி யோடு
கலந்து காசாக்கு வோரும்
மல்லியிற் புல்லுக் கொட்டை
மறைத்துமே விற்கின் றோரும்
நல்லவ ரென்றால் நீயோ
நாயகம் என்று சொல்வேன்.

கடமையைச் செய்தி டாது
கைக்கூலி வாங்கு வோரும்
உடைமைகள் சேர்ப்ப தற்காய்
ஊரினை உறிஞ்சு வோரும்
கடவுளின் பெயரி னாலே
காலத்தைத் தள்ளு வோரும்
நடமாடும் பெரியோ ரென்றால்
நானுன்னைப் பெரியோ னென்பேன்.

சேர்ந்துமே தொழில் புரிந்து
சிலநாளால் கழுத்த றுப்போர்
சேர்ந்துமே உண்டு டுத்துத்
தீமைகள் செய்கின் றோரும்
சேர்ந்துமே புத்தி சொல்லிச்
சிக்கலில் மாட்டு வோரும்
நேர்மைய ரென்று சொன்னால்
நீயென்ன துரோ கியாமோ?

வனத்திலே வேட்டை யாடி
வதைப்பது தர்ம மென்றால்
புனத்திலே பறவை கொன்று
புசிப்பது ஞாய மென்றால்
இனத்தையே அழித்துச் சொத்தை
எடுப்பது நீதி யென்றால்
மனிதரை உறிஞ்சும் உன்னை
மறிப்பது தர்ம மாமோ?

- காரை. செ. சுந்தரம்பிள்ளை

ஈழநாடு வாரமலர் 27-11-83

# ஐயகோ எங்கள் பாரத தேசமே!

ஐயகோ எங்கள் பாரத தேசமே
அகில லோகத்தின் ஆத்மீகத்தெய்வமே
வையகமே புகழ்கின்ற பெருமைசேர்
மாபெரும் ஞான வள்ளல்கள் அன்னையே
சைவ வைணவ சமண பௌத்தமா
சமயங்கள் தந்த தத்துவ பீடமே
நையவே சில கைதிகள் கண்களை
நாண மின்றிப் பறித்தனை ஞாயமோ?

எந்த நாட்டிலும் பொலிசார் செயல்களோ
இனிமையானவை அல்லத்தான்; ஆயினும்
இந்தவாறு கொடுமைப் படுத்துதல்
இந்தியாவிலா? என்கின்ற போதினில்
விந்தைதான்! அந்தப் புத்தரும் காநதியும்
விட்டுச் சென்றிட்ட அன்பு கருணையை
இந்த ஞாலத்தில் எங்குதான் தேடுவோம்
இச்செயல் பெரும் பாதகமாகுமாம்.

கம்பி கொண்டந்த காதகர் கண்களை
கருணையின்றியே குத்தும் பொழுதினில்
வெம்பி வெம்பி அழுதிருப்பார்; உளம்
வேதனை தனில் வெந்திருப்பார்; தமை
நம்பி வாழ்ந்திருப்போரை நினைந்துமே
நைந்து நொந்து வெடித்திருப்பார்; இந்த
அம்புவி தனில் இப்படி எத்தனை
ஆயிரம்பேர் அழிந்தொழிந்தார்களோ!

மனிதர்கள் தம் உரிமைத் தினத்தினை
மாபெரும் மேடை கட்டி அதிலேறி
இனிக்க மற்றவர் மெச்சவே பேசிடும்
இந்த நாடகம் ஏன் தான் நடக்குதோ
மனிதர்கள் தமை மனிதர்களாகவே
மதிக்க வில்லையாம் அதற்குப் பிறகிந்த
மனிதர்கள் உரிமைத் தினம் கொண்டாடும்
பாயவேலையை என்னென்று சொல்வது.

காரை செ. சுந்தரம்பிள்ளை

F.T.G. [illegible] 21-11-81

# வாழிய ஆயிரம் ஆண்டுகள்

ஈழத்தமிழர் தம் நெஞ்சில் நிறைந்திடும்
எம் தமிழ் நாயகியே
வாழும் தமிழர் கலை கலாச்சாரம்
வளர்த்திடும் தூயவளே
நாளும் புதிய புதின்ங்கள் தந்திடும்
நன்மகள் போன்றவளே
வாழிய பல்லாண்டு நீதி தழைத்திட
வையக மீதினிலே

தீயன கொன்றிடும் உந்தனைத் தீயவர்
தீர்க்க முயன்றிடினும்
நேயமாய் இருபத்து நாலாண்டை எய்தியே
நீதி வழி நடக்கும்
தூயவளே எங்கள் துன்பங்கள் போக்கிடத்
தொண்டு புரிபவளே
ஆயவை யாவும் எமக்கீந்து வாழிய
ஆயிரம் ஆண்டுகளே.

காரை செ. சுந்தரம்பிள்ளை

ஈழநாடு